LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearc
h2024,3: 47-55 Doi.: 10.21839/lsdjmr.2024.v3.159

**Research Article**

# கலித்தொகையில் இறைவன் பற்றிய தொன்மங்கள்

அருந்ததி. ச, சுமித்ரா. ஞா, சுருதி. பு,

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

இம்மாகுலேட் மகளிர் கல்லூரி,

கடலூர்.

Email:sumithrasumithra2303@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கச் சான்றோர்கள் இயற்கைக் காட்சிகளை, நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி, அவற்றையே தாம் கூறவந்த கருத்துகளை விளக்குவதற்கு உவமையாகப் பெரிதும் பயன்படுத்தி இருக்கின்றனர். ஆனால், கலித்தொகைப் பாடல்களில் புராண, இதிகாசக் கதைநிகழ்ச்சிக் குறிப்புகளும், சிவன், திருமால், முருகன் முதலிய கடவுளர் பற்றிய கதைக்குறிப்புகளும் காட்சிகளை. நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு உவமைகளாகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள புராண, இதிகாசத் தொன்மங்களையும், கடவுளர் பற்றிய தொன்மங்களையும் இக்கட்டுரை எடுத்துத்துரைக்கின்றது.

**கலைச்சொற்கள்**

தொன்மம், குறியீட்டு ஒழுங்குகள், புராணம், பழங்கதை, பழைய வரலாறு, பழைய நிகழ்ச்சி, தகடூர் யாத்திரை, சருக்கம், பிரதிச்சருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானு சரிதம்.

**முன்னுரை**

‘கற்றறிந்தோர் ஏத்தும் கலி’ என சிறப்பிக்கப்பெறும் செவ்வியல் இலக்கியம் கலித்தொகையாகும்.

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும் உரியதாகும்”
(தொல். அகத். 56)

என்ற தொல்காப்பியர் நெறிக்கேற்ப அமைந்த அக இலக்கியம் கலித்தொகையாகும். பாலைத்திணைப் பாடல்களைப் பெருங்கடுங்கோனும், குறிஞ்சித்திணையைக் கபிலனும், மருதத்திணையை மருதன் இளநாகனாரும், முல்லைத்திணையைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தலை நல்லந்துவனாரும் பாடியுள்ளனர்.

சங்கச் சான்றோர்கள் இயற்கைக் காட்சிகளை, நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி, அவற்றையே தாம் கூறவந்த கருத்துகளை விளக்குவதற்கு உவமையாகப் பெரிதும் பயன்படுத்தி இருக்கின்றனர். ஆனால், கலித்தொகைப் பாடல்களில் புராண, இதிகாசக் கதைநிகழ்ச்சிக் குறிப்புகளும், சிவன், திருமால், முருகன் முதலிய

கடவுளர் பற்றிய கதைக்குறிப்புகளும் காட்சிகளை. நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு உவமைகளாகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் கலித்தொகையில் இடம்பெற்றுள்ள புராண, இதிகாசத் தொன்மங்களையும், கடவுளர் பற்றிய தொன்மங்களையும் எடுத்துத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**தொன்மம் - விளக்கம்**

புராதன கால மனிதன் தன்னால் கட்டுப்படுத்த இயலாத இயற்கை ஆற்றலைக் கண்டு அச்சம் கொண்டான். அகையால் அவ்இயற்கைப் பொருள்களுக்கு உருவம் கொடுத்தும், கதை கூறியும் வழிபட்டான். இவ்வழிபாடு நடப்பியல் அற்புத நவிற்சியாக மாறி, இயற்கையிகந்த கூறுகளைப் பெற்று, சமய நம்பிக்கையில் கால்கொண்டு, சடங்கு முறைகளில் வெளிப்பட்டு விளங்குகின்றது. தொன்மங்களில்தான் ஒரு சமூகத்தின் கடந்தகால வாழ்வு அனுபவங்களையும் விபரீதங்களையும் முரண்பாகளையும் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இச்செயல்பாடுகளை ஒருங்கிணைத்து ஒருவிதக் குறியீட்டு ஒழுங்குகளுக்குள் அடுக்கி வைத்துக் கொள்கிறது. இந்த ஒழுங்கமைவு கால ஓட்டத்தில் அதன் அர்த்தப் பொருண்மைகளைப் பூடகமானதாகவும் புரிந்து கொள்வதற்கு அப்பாற்பட்டதாகவும் மாற்றிவிட்டு இருக்கிறது. அத்தொன்மம் காலமாற்றத்திற்கு ஏற்ப சமூக, சமய, அரசியல் மாற்றங்களால் மாற்றம் பெற்றன. கால வளர்ச்சியில் புதுத் தொன்மங்களும் தொன்மக் கலப்புகளும் உருவாயின. இத்தொன்மங்கள் பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்டு சமூகத்தினைப் பிரதிபலிக்கின்றன.

**தொன்மம்**

தொன்மத்தை ஆங்கிலத்தில் மித் என்று குறிப்பிடுவர். இந்த மித் என்ற சொல்லுக்குப் பழங்கதை, புராணக்கதை என்பது பொருளாகும். தொன்மம் என்ற சொல்லுக்குப் புராணம், பழமை, பழங்கதை, பழைய வரலாறு, பழைய நிகழ்ச்சி, மறைகள் கூறுகம் செய்திகளை வலியுறுத்திக் காட்டும் கதைகள் என்று பொருள்கள் சொல்லப்பட்டு வருகின்றன.

தமிழ்மொழியின் முதன்மை இலக்கணமான தொல்காப்பியம் குறிப்பிடும் உரை என்பது கதைகளைக் குறிக்கும்.

“பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்” (தொல். 1429)

என்ற நூற்பாவில் உரை என்பதை கதையாகக் கொண்டு புத்திலக்கிய வளர்ச்சிக்கு வித்திடுகின்றார்.

“ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே
ஒன்றே யார்க்கும் உரைநிலை இன்றே” (தொல். 1431)

என்ற நூற்பா செவிலியானவள் தலைவிக்குக் கதை கூறும் தன்மையை விளக்குகின்றது. அந்த வகையில் மிதோஸ் என்னும் கிரேக்கச் சொல் உரைக்கப்படுவது அல்லது கதை கூறுவது என பொருள் தந்ததைப் போலவே இங்கும் உரை என்ற சொல் உரைக்கப்படுவது, கதை கூறுதல் என்ற பொருளில் உணர்த்தப்படுவதோடு பொருத்தமாகவும் உள்ளது.

தொல்காப்பியச் செய்யுளியல்,

“தொன்மை தானே சொல்லுங் காலை
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே” (தொல். செய். 229)

என்ற நூற்பாவில் புராணத்திற்கு இலக்கணம் சொல்கிறது. இந்நூற்பாவிற்கு உரைகண்ட இளம்பூரணர், “நிறுத்த முறையானே தொன்மைச் செய்யுள் உணர்த்துதல் நுதலிற்று என்று கூறித் தொன்மையாவது உரையொடு பொருத்திப் போந்த பழைமைத்தாகிய பொருள்மேல் வருவது” என்று உரை கூறுகின்றார்.

பேராசிரியரும், “தொன்மை என்பது

உரைவிராய்ப் பழைமையனவாகிய கதை பொருளாகச் செய்யப்படுவது. அவை, பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை போல்வன" என்கிறார்.

நச்சினார்க்கினியர், "தொன்மையானது உரையொடு பொருந்திப் போந்த பழமைத்தாகிய பொருள்மேல் வருவன. அவை இராமசரிதமும், பாண்டவசரிதமும் முதலாகியவற்றின் மேல்வருஞ் செய்யுள்" என்று உரை கூறுகின்றார். இக்கருத்தின் அடிப்படையில் புராணமென்பது காலத்தால் முதிர்ந்த தொன்மையான செய்திகளைப் பயன்தோன்றச் செய்வது என்ற கருத்து பெறப்படுகின்றது. "எது தொன்றுதொட்டு இன்று வரையில் பரவி இருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயுபுராணம் கூறுகின்றது" (வாழ்வியல் களஞ்சியம், 1988). அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றும்வியாசமுனிவரால் இயற்றப்பட்டதும் சருக்கம், பிரதிச்சருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானு சரிதம் இவற்றைப் பற்றிக் கூறுவதுமான பழைய நூல் என்று தமிழ்ச்சொல் அகராதி கூறுகிறது.

**சமயமும் தொன்மமும்**

கடவுளர் பற்றிய கதைகள், கடவுள் குறித்த வரலாறுகள், குறியீடுகள், புனிதத்தன்மை கற்பிக்கப்பட்ட கதையாடல்கள் எனத் தொன்மங்கள் சமயம் சார்ந்தே இயங்கியிருக்கின்றன. எனவே, சமயமும் தொன்மமும் ஒன்றோடொன்று நெருங்கிய உறவுடையனவாய் அமைந்துவிடுகின்றன. தொன்மம் சமயத்தின் தொடர்புச் சாதனமாகச் செயல்படுகிறது. அது சமய நம்பிக்கைகளையும் மதிப்புகளையும் வெளிப்படுத்தி விளக்குவதோடு சமூகத்தார் அவற்றை ஏற்கவும் வழி செய்கிறது.

தொன்மங்கள் சமயத்தை மனிதப் பண்பாட்டில் பரவச் செய்யும் போக்குடையதாக அமைவதோடு, சடங்குகளும் சாத்திரங்களும் விளக்குகின்ற சமய மரபுகளை இயல்பாக எடுத்துரைக்கவும் செய்கின்றன. இவற்றின் வழி தொன்மம், சமயம், சடங்கு இம்மூன்றும் ஒன்றையொன்றுத் தழுவி நிற்கின்றன எனவும், தனித்தோ அல்லது எதிர்நிலையாகவோ இல்லை என்றும் கூற முடிகிறது. கதிர் மகாதேவனும்,

"ஆன்மீக உலகில் குறிப்பிடத்தக்க உண்மைகளையும் நுண்மைகளையும் தொன்மம் தன்னுள் தேக்கிவைத்துள்ளது எனலாம். சமயச் சார்புடைய எந்தப் படிமமாயிருந்தாலும் அந்தப் படிமம் தொன்மத்தோடு ஒட்டி உறவாடியிருப்பதைக் காண்கிறோம். தொன்மத்தை விடுத்துச் சமயத்தை ஆய்வோர் உருவத்தை விடுத்து நிழலை ஆய்பவர் ஆவார். சமயத்தின் ஆழ்ந்த நுண்ணிய நோக்கு, அடிப்படைக் கருத்துக்கள் யாவும் தொன்மத்தில் தோய்ந்து கிடப்பதைக் காணலாம்" எனத் தொன்மத்தையும் சமயத்தையும் பிரித்துப் பார்க்கக் கூடாது என்று கூறுகிறார்.

இந்தியத் தொன்மங்கள் சமணம், பௌத்தம், வைசம், வைணவம் முதலிய சமயங்களோடு இணைத்தே நோக்கப்படுகின்றன. எனினும் எல்லாத் தொன்மங்களையும் சமயச் சார்புடையன என்று கூறிவிட முடியாது. இவ்வாறு தொன்மக் கருத்துக்களை அனைத்து வகையான இலக்கியங்களும் தங்களின் கருத்துப் பரப்புதலுக்கு எடுத்தாளுகின்றன.

இறைவன் பற்றிய தொன்மங்கள்

சிவன், திருமால் போன்ற தெய்வங்கள் குறித்த தொன்மக் கதைகள் மனிதர்களின் கூட்டு முயற்சியால் உருவானவை. நம்முடைய ஆதித்தமிழனின் உருவமும் ஆற்றலும் செயல்களும் சிவன், திருமால் என்னும் தொன்மங்களாக உருவாகியிருக்கலாம். "ஆரம்ப காலத்து மனிதன், தான் எதிர்கொண்ட இயற்கையைத் தன் காலத்திய அறிவினால் புரிந்துகொள்ள முயன்ற முயற்சியின் வெளிப்பாடே தொன்மங்களாகும். மனித மனத்தின் கற்பனை ஆற்றலையும் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் வெடித்த முதல் கலை அமைப்பையும் இத்தொன்மங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. பின்னால் வர்க்க சமுதாயம் உருவான

போது இந்தத் தொன்மங்களில் இருந்துதான் மதக் கடவுள்களுக்கான கதைகள் மாற்றி உருவாக்கம் செய்யப்பட்டன". (க. பஞ்சாங்கம், தொன்மத் திறனாய்வு, ப. 114-115).

**சிவபெருமான் பற்றிய புராணக்கதைக் குறிப்புகள்**

முழுமுதற் கடவுளான சிவன் கடவுள்வாழ்த்துப் பாடலில் முதன்மைபடுத்திப் பாடப்பட்டுள்ளார். நூலின் தொடக்கமாக நல்லந்துவனார் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவபெருமானுக்குரிய குணங்கள், செயல்கள் சார்ந்த புராணக்கதையைக் கூறியுள்ளார்.

"ஆறுஅறி அந்தணர்க்கு அருமறை பல பகர்ந்து
மண்டு அமர் பலகடந்து மதுகையால் நீறுஅணிந்து
பாண்டரங்கம் ஆடுங்கால் பணைஅணிந்து எழில் அணை மென்தோள்"

(கலி. கடவுள் வாழ்த்து 1)

என்று இறைவனின் செயல்களாக அந்தணர் என்னும் சான்றோர்க்கு அரிய நுட்பங்களைத் தெளிவித்தல், திரிபுரம் எரித்தல், மணிமிடறு கரத்தில் துடிகொண்டு ஒலிக்கச் செய்தல், இறந்தாரது நீற்றினை அணிதல், பல்வகை ஆடல் புரிதல் முதலான தொன்மக்கூறுகள் கடவுள் வாழ்த்துப் பாடலில் இடம்பெற்றுள்ளன.

சிவன் கூற்றுவனின் நெஞ்சைப் பிளந்து, குடலைக் கூளிக்கு இட்டமை

பொதுவன் ஏறு தழுவும்போது, எருதானது பொதுவனைச் சாடி, அவன் குடல் சரியக் குத்திக் குலைத்ததாம். இக்காட்சியானது, சிவபெருமான், ஊழி முடிவிலே, எல்லா உயிரினங்களையும் அழிக்கும் எருமைக்கடாவின்மேல் ஏறிவரும் கூற்றுவனின் நெஞ்சைப் பிளந்து, அவன் குடலைக் கூளிக்கு இட்டு, அதன் வயிற்றை நிரப்புவானாம். இப்புராணக்கதை நிகழ்ச்சியை ஒத்திருந்தது என்பதனை,

"படர்அணி அந்தி பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்றுஎருமை நெஞ்சு இடந்துஇட்டு
குடர் கூளிக்கு ஆர்த்துவான் போன்ம்" (கலி. 101: 24-26)

எனும் அடிகளில் குறிப்பிடுகின்றார்.

சிவன் கூற்றுவனைக் காலால் உதைத்து நெஞ்சைப் பிளந்தமை

பொதுவன், காற்றைப்போல் விரைந்து வருகின்ற சினமுடைய ஏற்றைக் களத்தகத்தே, அதன் வலிமை அடங்கத் தழுவி, அதனை வருத்தி அதன்மேல் ஏறி நிற்கின்றான். பொதுவனின் இச்செயலானது, சிவபெருமான், எருமைக்கடாவின்மீது இவர்ந்து செல்லுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சத்தைக் காலால் உதைத்துப் பிளந்திட்டுச் சீற்றத்துடன் அவனுடைய அரிய உயிரைக் கொன்ற செயலோடு ஒத்திருந்தது என்பதனை,

"ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பின் இடந்து இட்டு
,
சீற்றமோடு ஆர்உயிர் கொண்ட ஞான்று, இன்னன்கொல்
கூற்று என உட்கிற்று என் நெஞ்சு" (கலி. 103: 43-45)

எனும் அடிகளில் குறிப்பிடுகின்றார்.

**சிவன் மூவெயில்களை அழித்தமை**

ஞாயிறு தன் செறிந்த கதிர்களை எவ்விடத்தும் பரப்பி, சுடுகின்றமையின், அத்தீயானது, காட்டுத்தீப்போல எழுந்து மலையிடத்து எங்கும் பரந்து, விசும்புர ஓங்கி வெம்மையைச் செய்தது. ஞாயிற்றின் இச்செயலானது, கொன்றை மாலையை அணிந்த, இறைவன் அசைகின்ற எயில்களை

அழித்தமையினால் தோன்றிய வெம்மை உடைய நெருப்பினைப் போன்றிருந்தது என்பதனை,

“அயம்திகழ் நறுங் கொன்றை அலங்கல்அம் தெரியலான்
இயங்கு எயில் எயப்பிறந்த எரிபோல எவ்வாயும்” (கலி. 150: 1-2)

எனும் அடிகளில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

சிவன் கங்கையைச் சடையில் சூடியமை

தலைவன் பொருள் ஈட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்துள்ளான். தலைவனைப் பிரிந்து ஆற்ற இயலாதவளாய் உள்ள தலைவியைத் தோழி ஆற்றுவிக்கின்றாள். அவ்வாறு ஆற்றுப்படுத்தும்போது, தலைவியின் உடல் பசலை பாய்ந்து நிறம் மாறிக் காணப்படுகின்றது. தலைவியின் நிறம், கங்கையைச் சடையிலே மறைத்துள்ள சிவனது அணி போன்று உள்ளதென்றும், இத்தன்மையளாய தலைவியைத் தலைவன் கைவிடமாட்டான் என்றும் கூறி ஆற்றுவித்ததனை,

“அறம் துறந்து ஆயிழாய்! ஆக்கத்தில் பிரிந்தவர்
பிறங்கு நீர் சடைக்கரந்தான் அணிஅன்ன நின்நிறம்
பசந்துநீ இனையையாய் நீத்தலும் நீப்பவோ?” (கலி. 150: 8-10)

எனும் அடிகளில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மேலும், அவளின் நிறமானது, அழகிய வடிவுடைய ஏற்றினை ஊர்தியாக உடையவனின் ஒளிபொருந்திய அணி நகைத்தலைப் போன்றுள்ளது என்பதனை,

“உருவ ஏற்று ஊர்தியான் ஒள் அணி நக்கன்னநின்
உருஇழந்து இனையையாய் உள்ளலும் உள்ளுபவோ” (கலி. 150: 13-14)

எனும் அடிகளில் குறிப்பிடுகின்றார்.

**சிவன் சண்பகப்பூ அணிந்துள்ளமை**

ஆதிரை நாளினையுடைய சிவபெருமானது திருமார்பு அழகுபெறுமாறு, குளிர்ந்த பெரிய சண்பகப்பூ பருவம் பொய்யாது மலர்வதைப்போல, நம் தலைவரும் சொல்லிச் சென்ற பருவம் வந்தமை கண்டு, தவறாது நம்மை வந்தடைவார் என்று கூறி, தோழி ஆற்றுப்படுத்துகிறாள். இதனை,

“அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல ஒருங்கு அவர்
பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்” (கலி. 150: 19-21)

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன.

**சிவன் தலைக்கோலங்களின் தோற்றம்**

தலைவனைப் பிரிந்த தலைவியின் கூந்தல் காய்ந்து காணப்படுதலைக் கண்ட தோழி, அவளின் கூந்தலானது, பிறைத்திங்களைக் கண்ணியிலே சூடியவனின் பொன்னாற் செய்த தலைக்கோலங்கள் தாழ்ந்து தொங்கினாற்போன்று காணப்படுவதாகக் கூறியதனை,

“புதுத்திங்கட் கண்ணியான் பொன்பூண் ஞான்று அன்ன நின்
கதுப்புஉலறும் கவினையாய் காண்டலும் காண்பவோ” (கலி. 150: 17-18)

எனும் அடிகள் கூறுகின்றன.

சிவன் கல்லால மரநிழலில் சனகாதி முனிவர்கட்கு வேதம் உபதேசித்தமை

சிவன் தான் கல்லால மரத்தின் நிழலில் சனகாதி முனிவர்களுக்கு வேதம் உபதேசித்தபோது, தன்முன் நீர் நிறைந்த குண்டிகை எடுத்து வைத்திருந்தான். இந்நிகழ்ச்சி நெய்தல் நிலத் துறைவனைக் குறிப்பிடும்போது, மலர்கள் மலர்ந்த வளைந்த தாழையில் பழங்கள் தொங்குகிற காட்சியைப் போன்று இருந்தது என்பதனை,

“சீர் மிகு சிறப்பினோன் மரமுதல் கைசேர்த்த
நீர் மலி கரகம்போலப் பழம்தூங்கு முடத்தாழை” (கலி. 133: 3-4)

எனும் அடிகளின் மூலம் சிவன் கல்லால மரநிழலில் வீற்றிருந்து, சனகாதி முனிவர்களுக்கு

வேதம் உபதேசித்த புராணச் செய்தியை நல்லந்துவனார் குறிப்பிடுகின்றார்.

**திருமால் பற்றிய புராணக் குறிப்புகள்**

வைணவம் என்னும் சமயத்தின் முதன்மையான கடவுள் திருமால். உலகைக் காக்கும் தொழிலைச் செய்பவர். சங்க காலத்தில் தமிழர்கள் வணங்கிய மாயோன் என்ற கடவுள் திருமாலைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. சங்க காலத்திற்குப் பிறகு ஆழ்வார்கள் மற்றும் வைணவ ஆச்சாரியார்கள் ஆகியோர்களால் திருமால் வழிபாடு வளர்ச்சி பெற்றது. தமிழர்கள் முல்லை நிலத் தெய்வமாக மாயோனை வணங்கியதாகச் சங்க இலக்கியம் கூறுகின்றது. மாயோன் என்ற சொல்லக்குக் கருமை நிறம் கொண்டவன் என்று பொருள். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடல் என்னும் நூலில் திருமாலைக் குறித்து எட்டு பாடல்கள் உள்ளன. பன்னிரு ஆழ்வார்கள் திருமாலைக் குறித்துப் பாடிய பாடல்களின் தொகுப்பு நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்று அழைக்கப்படுகிறது.

**திருமால் குதிரையினுடைய வாயைப் பிளந்தமை**

பொதுவன் ஏறு தழுவும்போது, மிகுந்த வேகத்துடன் தன்னை எதிர்த்துவந்த ஏற்றைச் செவியடியிற் பற்றிக்கொண்டு, அதன் வலிமையை அடக்கித் தழுவுகிறான்.

இக்காட்சிக்கு, பகைவர் விடுத்த பிடரிமயிர் கொண்ட குதிரையினுடைய வாயைப் பிளந்து கொன்ற திருமாலின் செயலினை,

“மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத்து இட்டு புடைத்த ஞான்று இன்னன் கொல்
மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு” (கலி. 103: 53-55)

எனும் அடிகளில் உவமையாகக் குறிப்பிடுகின்றார்.

திருமால் பாடலோடு யாழிசையும் கேட்டுப் பள்ளி கொண்டிருந்தமை

தலைவி தலைவனைச் சந்திக்க இயலாத வண்ணம் காவல் மிகுந்தமையால் ஆற்றாத தலைவி, தலைவனிடத்துச் சென்ற நெஞ்சினை நோக்கி, மனம் அழிந்து கூறுகின்றாள். கரிய கொம்புகளையுடைய புன்னை மரத்தின் கிளைகள்தோறும் மலர்கள் மலரும் காலத்தை எதிர்பார்த்து, அதன் தேனை உண்ண சுரும்புகள் ஆரவாரிக்கின்றன. அதனோடு இயைந்து தும்பிகளும் ஊதுகின்றன. இவையிரண்டும் இயைந்து இம்மென்று ஒலிக்கும்.

இக்காட்சியானது, பாடலோடு யாழிசையும் கேட்டுப் பள்ளி கொண்டிருக்கும் திருமாலைப் போன்றுள்ளதென்றும், எப்பொழுதும் ஒலித்துக்கொண்டிருக்கும் பெரிய கடலும் ஒலியடங்கி, உறக்கம் மேற்கொள்வதைப் போன்றிருந்ததென்றும் கூறுவதனை,

“அரும் பொருள் மரபின் மால்யாழ் கேளாக் கிடந்தான் போல்
பெருங்கடல் துயில்கொள்ளும் வண்டுஇமிர் நறுங்கானல்” (கலி. 123: 4-5)

எனும் அடிகளில் ஆசிரியர் கூறுகின்றார்.

மாயோன் மல்லர்களை அழித்தமை

மாயோன், பகையாய மல்லர்களின் வலிமையை அழித்தனன். பகைவர் ஒருசேர வந்து சினந்து போரிட்ட காலத்தே அவர் ஓடும்படியாக அவர்தம் கொல்யானையின் அழகிய மத்தகத்திலே சக்கரப்படையை ஆழ்த்தியதைப்போல, கதிரவன் தான் பரப்பிய ஒளிக்கற்றைகளைத் தன்னிடத்தே வாங்கிக்கொண்டு மேற்றிசையில் மறைந்தான் என்பதை,

“மல்லரை மறம் காய்த்த மலர்த்தண்கார் அகலத்தோன்
ஒல்லாதார் உடன்று ஓட உருத்து உடன் எறிதலின்
கொல் யானை அணிநுதல் அழுத்திய ஆழிபோல” (கலி. 134: 1-3)

எனும் அடிகளில் கூறுகின்றார்.

திருமாலின் மார்பிடத்தே திருமகள் உறைந்துள்ளமை

தலைவன் வரைவிடை வைத்துப் பிரிவு நீட்டித்த இடத்து, தலைவி பிரிவை ஆற்றாதாளாகி, நாணம் கடந்து, உள்ளம் கலங்கி, கூறத்தகாதன கூறி, அறிவு அழிந்து மொழிந்தனள். தலைவன் வந்து சேர்ந்த அளவில் கலக்கம் ஒழியத் தெளிந்து, அவன் மார்பிடத்தே சேர, ஞாயிற்றின் முன் இருள் கெடுமாறுபோல, அவள் வருத்தம் கெட்டது. இக்காட்சி, திருமாலின் மார்பிடத்தே திருமகள் சேர்ந்ததைப் போன்றிருந்தது. இதனை,

“பாயல் கொண்டு உள்ளாதவரை வரக் கண்டு
மாயவன் மார்பில் திருப்போல் அவள் சேர
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது - என்
ஆயிழை உற்ற துயர்” (கலி. 145: 63-66)

எனும் அடிகளில் கூறுகின்றார்.

**திருமாலின் திரிவிக்கிரம அவதாரம்**

நெய்தல் நிலத் தலைவனாகிய சேர்ப்பனைக் கூறும்போது, திருமாலுக்கு மூத்தவனான பால்நிற மேனியையுடைய பலராமன் அழகுபெற அணிந்துள்ள நீலநிற ஆடையைப்போல, வெண்திரையை உடைய கடல்நீரை உடைய சேர்ப்பன் என வருணிக்கிறார். பலராமனுடைய தம்பியாகிய திருமாலைக் குறிப்பிடும்போது, திருமால் தன் மூன்றடியால் உலகளந்த திரிவிக்கிரம அவதாரச் செய்தியை,

“ஞாலம் மூன்று அடித் தாய முதல்வற்கு
முதுமுறைப்
பால் அன்ன மேனியான் அணி பெயத் தைஇய”
(கலி. 124: 1-2)

எனும் அடிகளில் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

கலித்தொகைப் பாடல்களைப் பாடிய சங்கப்புலவர்கள், நிகழ்ச்சிகளை, கருத்துகளை விளக்குவதற்கு, தாங்கள் சார்ந்திருந்த சமயக்கடவுளர்கள் பற்றிய தொன்மங்களை உவமைகளாகப் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர். இத்தொன்மக் கதைகளின்வழி, புலவர்கள் காட்சிகளைச் சித்திரிப்பதால் அவை, கற்போர் மனதில் சித்திரங்களாகப் பதிந்து அக்கருத்துகள், நிகழ்ச்சிகள் நன்கு விளங்குகின்றன. மனித மனிங்களுக்குப் புலப்படாத விளங்காத ஒன்றை விளங்க வைக்கவே தெய்வம் சார்ந்து கதைகள், புராணங்கள் கலித்தொகையில் பாக்களின் கதைப்போக்கிற்கு ஏற்பப் புனையப்பட்டுள்ளன. தொன்மங்கள் ஓரினத்தின் வரலாற்றையும் நாகரீகத்தையும் காட்டுகின்றன என்பதையும், இத்தகைய தொன்மக் கூறுகளை, இலக்கியங்கள் எவ்வாறு தம் கதைப்போக்கிற்கு ஏற்பக் கையாளுகின்றன என்பதையும் அறிய முடிகின்றது. தலைமுறை தலைமுறையாக மக்களிடம் வழங்கிவரும் பழங்கதைப் பாத்திரங்களின் செல்வாக்கு புலவர்களை ஈர்த்ததே இலக்கியங்களில் தொன்மம் இடம்பெறக் காரணமாக உள்ளது.

**துணைநூற்ப்பட்டியல்:**


1. கலித்தொகை மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை. 2004.

2. தொல்காப்பியம். இளம்பூரணர் உரை. தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம். தஞ்சாவூர். 2008.

3. பஞ்சாங்கம். க. 2011. தொன்மத் திறனாய்வு. தஞ்சாவூர்: அன்னம் பதிப்பகம்.

4. வாழ்வியல் களஞ்சியம். (1988). தஞ்சாவூர்: தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.